# SCOPE - Specific Concept Oriented Programme

**திட்டக் குறிக்கோள் :-**

- பாடத்திட்டத்தில் உள்ள கருப்பொருளை மாணவர்கள் சேதானையின் அடிப்படையில் எளிதில் புரிந்து கொள்ளும் திறமையை அதிகரித்தல்.
- அறிவியல் ஆய்வுகள் மற்றும் வினவல் மூலம் கற்றலை ஊக்குவித்தல்.
- மாணவர்களின் அறிவாற்றலை Projects, Assignments and Field Visits மூலம் வலுவூட்டுதல்.
- 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ப மாணவர்களிடம் சேர்ந்து கற்றல், தலைமைப் பொறுப்பு, பங்கேற்றல் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- பாடத்தில் உள்ள கருப்பொருளை அன்றாட வாழ்வில் தொடர்புபடுத்தி கற்கும் வகையில் மாணவர்களின் அறிவுத் திறனை வளர்ச்சியடைய செய்தல். பாடப்புத்தகத்திற்கு அப்பாற்பட்டு, புதிய சிந்தனை மற்றும் புதிய உத்திகளை பயன்படுத்தி கற்கும் ஆர்வத்தை தூண்டுதல் மற்றும் வளர்த்தல் ஆகும்.

**திட்டம் செயல்படுத்தும் முறைகள் :-**

- தெரிவு செய்யப்பட்ட 320 பள்ளிகளில் (ஒரு மாவட்டத்திற்கு 10 பள்ளிகள் வீதம் ) கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வணிகவியல் மற்றும் பொருளியல் பாடத்திட்டத்தில் உள்ள கருப்பொருளை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கற்றல் திறமையை அதிகரிக்கச் செய்தல்.
- மாணவர்கள் பள்ளியில் தனது பாடம் சார்ந்து செய்துணர் கற்றலை செய்முறையின் மூலம் அறியும் போது ஆசிரியர்கள் உறுதுணையாக இருக்கவும். காணொலி காட்சி மற்றும் திட்ட அறிக்கையினை தயார் செய்தல் . மாணவர்களுக்கு பாடம் சார்ந்த புதிய கருத்தினை அவ்வப்போது மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்.
- கூதாழிற்சாலைகளை நேரில் சென்று பார்வையிடுதல் பாடத்தில் புலமை உள்ள கல்லூரி மற்றும் பல்கலை கழக பேராசிரியர்களை சந்தித்து விளக்கம் பெறுதல்.
- பாடங்களுடன் தொடர்புடைய கருத்து விளக்கங்களை அறிவியல் புத்தகங்கள் , அறிவியல் இதழ்கள் ஆகியவற்றின் துணை கொண்டு புரிந்து கொள்ள செய்தல்.
- பாடப்புத்தகத்திற்கு அப்பாற்பட்டு, புதிய சிந்தனை மற்றும் புதிய உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல் மற்றும் வளர்க்க செய்தல் .

**எதிர்பார்க்கப்படும் திட்ட விளைவுகள் :-**

- புரியாமல் கற்கும் முறை குறைக்கப்படும் மற்றும் செய்து கற்றல் முறை ஊக்குவிக்கப்படும். மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுதல் மற்றும் வளர்க்க செய்தல் .

- புலனாய்வுத் திறன் , கண்டுபிடிப்புத் திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்ட இணை பாடத்திட் ட மற்றும் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**நிதி ஒதுக்கீடு :-**

இத்திட்டத்திற்கென மாவட்டத்திற்கு ஒரு இலட்சம் வீதம் ரூ. 32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பயனாளிகள்:**

அரசு மேல் நிலைநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்